DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 112/2022 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சுப்புராமன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.07.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. சார்ஜ் சீட் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. பார்வை மகஜர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. வாரிசு சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8.இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9.மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்கள் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. 1ம் மனுதாரரின் வங்கி பாஸ்புத்தக நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11.இறந்த சங்கீதாவின் கல்விச் சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றி என் அப்பா சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான், பக்கத்துவீட்டுக்காரர் சொன்னார். என் மனைவி மகளிர் மன்றத்தில் உறுப்பினராக இருந்து சுயதொழில் செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். விபத்தை ஏற்படுத்திய வாகனம் என்னவென்றால் ஜேசிபி வாகனம், TN 52 D 4281 ஆகும். ஜேசிபி ரோட்டில் எந்த பகுதியில் நின்று கொண்டிருந்தது என்றால் ரோட்டின் மேற்கு பகுதி, தெற்கிலிருந்து வடக்குபக்கம் போகும் போது சம்பவம் நடந்தது. என் மனைவி தெற்கிலிருந்து வடக்குப்பக்கம் போகும் போது ரோட்டின் கிழக்கு பகுதியில் தான் செல்ல வேண்டும் என்றும், தவறுதலாக மேற்குபக்கம் சென்று தானே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஹரிஸ்ராகவேந்திரன் (2ம் மனுதாரர்) என்ற ஒரே மகன் உள்ளார். தற்போது என் மகன் என்ன படிப்பு படிக்கிறார் என்றால் 12ம் வகுப்பு, தேவகோட்டை அரசுப் பள்ளியில் படித்து வருகிறார்.

2. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து, மற்ற காலங்களில் காய்கறிகள் விற்று வருகிறேன். என் மனைவி மாதம் ரூ.15 ஆயிரம் சம்பளம் பெற்றுவந்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஜேசிபி வானத்தை ஓட்டிய 1ம் எதிர்மனுதாரர் சதாம் உசைன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா

என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் விபத்தை ஏற்படுத்தியதால் 3ம் எதிர்மனுதாரர் எந்தவொரு பரிகாரமும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்து என் மனைவியின் கவனக்குறைவால் மட்டும்தான் நடந்தது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 112/2022 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | கணேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.07.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை**

1. விபத்து எந்த தேதி எந்த மாதம் நடைபெற்றது என்றால் 2016ம் வருடம் நடைபெற்றது. நான் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் மனுதாரரின் பக்க்த்துவீட்டார் ஆவேன். மனுதாரரும் நானும் உறவினர்களா என்றால் ஆமாம். விபத்து நடந்த வண்டி ரோட்டின் எந்த பகுதியில் நின்றுகொண்டிருந்தது என்றால் ரோட்டின் மேற்கு பகுதியில் நின்று கொண்டிருந்தது. விபத்து சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை எதுவும் செய்யவில்லை. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள் என்று

குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். மனுதாரருக்கு நான் உறவினர் என்பதால் மனுதாரர் அதிக இழப்பீடு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஓம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.